இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக்கல்வி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

மட்டம் - 06

**EPU6230- உள்ளடங்கற் கல்வி**

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 16.03.2024 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 03.30

பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. உள்ளடங்கற் கல்வி எனும் எண்ணக்கருவை உங்கள் சொந்த மொழிநடையில் எடுத்துக்காட்டுகளை மேற்கோள் காட்டிச் சுருக்கமாக விளக்குக.
2. ஓர் ஆரம்பக்கல்வி ஆசிரியராக உமது பாடசாலையில் உள்ளடங்கல் நடைமுறையை எவ்வாறு மேம்படுத்துவீர்.
3. மீத்திறனுள்ள மாணவர்களின் ஐந்து (05) பண்புகளைக் குறிப்பிடுக.
4. ஒரு ஆரம்பப் பிரிவு ஆசிரியராக, எழுதுவதில் சிரமம் உள்ள மாணவர்களின் அறிகுறிகளை எவ்வாறு கண்டறியலாம்? ஒரு உதாரணத்துடன் சுருக்கமாக விளக்குக.
5. உள்ளடங்கல் நடைமுறையில் பெற்றோர்களின் கவனத்தைப் பெறுவதில் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் முகம் கொடுக்கும் சவால்களைச் சுருக்கமாக விளக்குக.
6. உள்ளடங்கல் வகுப்பறையில் பணிபுரியும் ஆசிரியர்களின் **ஐந்து** (05) முக்கிய பாத்திரங்களைப் பட்டியலிட்டு அவற்றில் **ஒன்றை** (01) விளக்குக.
7. குறைபாடுகள் இல்லாத சாதாரண மாணவர்கள் உள்ளடங்கற் கல்வியின் மூலம் பெறக்கூடிய **ஐந்து** (05) நன்மைகளைக் குறிப்பிடுக.
8. உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களின் பல்வகைமையின் பொருளை **இரண்டு** (02) எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**(05x08 =40புள்ளிகள்)**

## பகுதி – II

9. அ. உள்ளடங்கல் வகுப்பறையின் ஆசிரியராக, புலன்சார் குறைபாடுகள் உள்ள மாணவர்களை நீங்கள் எவ்வாறு அடையாளம் காண்பீர்கள்? **இரண்டு** (02) உதாரணங்களுடன் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

ஆ. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கற்றல் செயல்முறையில் புலன்சார் ஆற்றலின் முக்கியத்துவத்தினைப் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. **(07 புள்ளிகள்)**

இ. உள்ளடங்கல் வகுப்பறையில் ஒரு ஆசிரியராக, ஆழ்ந்த செவித்திறன் இழப்பு மற்றும் முற்றிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு இடமளிக்க குறைந்தபட்சம் நான்கு (04) உத்திகளை விளக்குக.

**(08 புள்ளிகள்)**

10. அ. நீங்கள் ஒரு பாடசாலையில் ஆசிரியராக இருப்பதாக கற்பனை செய்து கொண்டு, அங்கு பாடசாலை அதிபர் மற்றும் ஊழியர்கள் உள்ளடங்கற் கல்வியில் எதிர்மறையான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளனர். உள்ளடங்கற் கல்வி பற்றிய அவர்களின் எதிர்மறையான அணுகுமுறையை நீங்கள் எவ்வாறு அடையாளம் கண்டீர்கள்? உங்கள் பதிலை நியாயப்படுத்துக.

**(05 புள்ளிகள்)**

ஆ. அவர்களின் எதிர்மறை மனப்பாங்கை மாற்ற நீங்கள் பயன்படுத்தப் போகும் **ஐந்து** (05) பொருத்தமான அணுகுமுறைகளை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் பரிந்துரை செய்க. **(07 புள்ளிகள்)**

இ. பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பின்மை இலங்கை கல்வி முறையில் உள்ளடங்கற் கல்வி நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு தடையாக உள்ளது. இந்த கூற்றை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? உங்கள் பதிலை நியாயப்படுத்துக. **(08 புள்ளிகள்)**

11. அ. கலைத்திட்டத் தழுவல் என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

ஆ. உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களின் பல்வகைமைத் தேவைகளுக்கு ஏற்ப ஆசிரியர்கள் இடமளித்தல் வசதி மற்றும் மாற்றங்களுடன் கலைத்திட்டத்தை எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பதை விளக்குக. **(07 புள்ளிகள்)**

இ. நீங்கள் உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக இருப்பதால், வகுப்பறையில் உள்ள பல்வகைமைத் தேவைகளை நிவர்த்தி செய்ய பாடத்திட்டத்தை மாற்றியமைக்கும் போது எதிர்கொள்ளும் சவால்களை விவரிக்குக. **(08 புள்ளிகள்)**

12. அ. உள்ளடங்கல் வகுப்பறையில் மாணவர்களிடையே காணப்படும் **ஐந்து** (05) பல்வகைமைத் தேவைகளைப் பட்டியலிடுக. **(05 புள்ளிகள்)**

ஆ. அனைவரையும் உள்ளடக்கிய வகுப்பறையின் ஆசிரியராக, அனைவருக்கும் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் எவ்வாறான தடைகள் காணப்படலாம்? இந்த தடைகளை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க. **(07 புள்ளிகள்)**

இ. உள்ளடக்கிய வகுப்பறையின் ஆசிரியராக, அனைவருக்கும் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் எவ்வாறான தடைகள் காணப்படலாம்? இத்தடைகளை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

13. அ. ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் (ASD) பற்றிய எண்ணக்கருவை உங்கள் மொழிநடையில் சுருக்கமாக விளக்குக. **(05 புள்ளிகள்)**

ஆ. ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் காரணமாக மாணவர்கள் ஏன் மோசமான கல்வித்திறனை வெளிக்காட்டுகிறார்கள் என்பதை **மூன்று** (03) காரணங்களுடன் ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

இ. ஒரு ஆரம்பப்பிரிவு ஆசிரியராக, ஒட்டிசத் திருசிய ஒழுங்கீனம் உள்ள மாணவனின் நடத்தையை முகாமை செய்ய கற்பித்தல் நுட்பங்களை நீங்கள் எவ்வாறு பயன்படுத்துவீர்? நான்கு (04) கற்பித்தல் நுட்பங்களை விவரிக்கவும். **(08 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -